www.Padasalai.Net

| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர் |
| திருமதி.வே.அமுதவல்லி, இ.ஆ.ப., | 1) மாவட்ட ஆட்சித் தலைவர்கள், |
| சமூக நல ஆணையர், | அனைத்து மாவட்டங்கள் |
| சமூக நல ஆணையரகம், | (சென்னை நீங்கலாக) |
| லேடி வில்லிங்டன் கல்லூரி வளாகம், | 2) ஆணையர், |
| காமராஜர் சாலை, சென்னை-05. | பெருநகர சென்னை மாநகராட்சி, |
| | சென்னை- 03. |

ந.க.எண். 014677/ சஉ தி-2/2024, நாள். 29.05.2024

பொருள்: சமூகநல ஆணையரகம் - புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் - சத்துணவு மையங்கள்- கோடைகால விடுமுறை முடிந்து பள்ளிகள் மீண்டும் திறக்கும் போது பின்பற்ற வேண்டிய அறிவுரைகள் வழங்குவது- குறித்து

பார்வை
1. பள்ளிக் கல்வித் துறை அறிவிப்பு , அரசு செய்தி வெளியீடு. நாள் 25.05.2024
2. அரசாணை (நிலை) எண் .27, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந4-1.1) த்துறை நாள்.22.12.2023.
3. சமூக நல ஆணையர், சென்னை-05 அவர்களின் செயல்முறை நடவடிக்கை கடித ந.க.எண். 03569/சஉ_தி-2/2024 , நாள். 05.04.2024.

--------

பார்வை (1)ல் காணும் அரசு செய்தி வெளியீட்டின் படி, 2024-2025 ஆம் கல்வியாண்டில் 1 முதல் 12 வகுப்புகளுக்கு கோடை விடுமுறை முடிந்து ஜூன் 6 ஆம் தேதி அன்று பள்ளிகள் திறக்கப்படும் என அரசு செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து, பள்ளிகள் திறக்கப்படும் நாள் முதல் அனைத்து பள்ளி கீழ் சத்துணவு மையங்களிலும் தடையின்றி உரிய நேரத்தில் மதியஉணவு சமைத்து மாணவ மாணவியர்களுக்கு வழங்கிட ஏதுவாக அனைத்து முன்னேற்பாடு நடவடிக்கைகளையும் உறுதி செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

கோடைகால விடுமுறை முடிந்து பள்ளிகள் மீண்டும் திறக்கும் 2 நாட்களுக்கு முன்னதாக சம்மந்தப்பட்ட மையப்பணியாளர்கள் சத்துணவு மையங்களுக்கு சென்று, மையங்கள் சுத்தம் செய்திட வேண்டும். இருப்பில் உள்ள காலாவதியான உணவுப் பொருட்களை கண்டறிந்து உடன் அப்புறப்படுத்திட வேண்டும். (குறிப்பாக, எண்ணெய், முட்டை, கொண்டைக்கடலை, பாசிபயறு போன்ற உணவுப் பொருட்கள் சமையல் செய்யும் நிலையில் தரமானதாக உள்ளதா என சரி பார்க்கப்பட வேண்டும்.

www.Padasalai.Net

06-06-2024 முதல் தடையின்றி உரிய நேரத்தில் சத்துணவு சமைத்து வழங்க ஏதுவாக அனைத்து சத்துணவு மையத்திலும் பணிபுரியும் சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்கள் பின்வரும் முன்னேற்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் தங்குதடையின்றி செம்மையான முறையில் திட்டத்தினை செயல்படுத்திட ஏதுவாகவும் கீழ்காணும் அறிவுரைகளை தவறாமல் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

1. அனைத்து பள்ளிகளின் சமையற் கூடங்களும் தூய்மை செய்யப்பட வேண்டும்.
2. பள்ளிகளில் பணிபுரியும் சத்துணவு அமைப்பாளர்கள், சமையலர்கள் மற்றும் சமையல் உதவியாளர்கள் பள்ளி துவங்கும் நேரத்திற்கு தொடங்குவதற்கு முன்பாகவே சத்துணவு மையங்களை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.
3. 45 நாட்களுக்கு தேவையான உணவுப்பொருட்களுக்கான தேவைப்பட்டியல் சேமிப்புக்கிடங்கு அலுவலகத்தில் ஒப்படைப்பு செய்து, உணவுப்பொருட்கள் இருப்பு இருப்பதை உறுதி செய்திட வேண்டும். ஏற்கனவே பெறப்பட்டுள்ள உணவுப் பொருட்கள் இருப்பு இருப்பின் அதனை குறைத்து 45 நாட்களுக்கான தேவைப்பட்டியல் ஒப்படைப்பு செய்திட வேண்டும்.
4. சமையல் பணியின் போது உபயோகிக்கும் நீர் தூய்மையான குடிநீர் என்பதை சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் பரிசோதித்தப் பின்னர் மட்டும் சமையல் பணிக்கு உபயோகித்திட வேண்டும். பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவானது மிகவும் பாதுகாப்பான முறையில் தயார் செய்யப்பட வேண்டும்.
5. சமைப்பதற்கு தேவையான உணவுப்பொருட்கள் சுகாதாரமாகவும் சுத்தமாகவும் உள்ளதை உறுதி செய்திட வேண்டும்.
6. சிறப்பு உணவான முட்டைகளின் தரம் அறிந்து சமைத்து வழங்கப்பட வேண்டும். சத்துணவு மையங்களில் இருப்பில் உள்ள முட்டைகள் வேகவைப்பதற்கு முன் தண்ணீரிலிட்டு பரிசோதித்து, நல்ல முட்டைகளை மட்டும் வேகவைக்க வேண்டும். வேகவைத்த பிறகும் முட்டைகளை உரித்துப்பார்த்து நல்ல நிலையில் உள்ளது என்பதை தலைமையாசிரியர்/பொறுப்பாசிரியர்கள் உறுதி செய்த பின்பு மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.
7. அனைத்து சத்துணவு மையங்களையும் முன்னேற்பாடாக சுத்தம் செய்து, சமையல் பாத்திரங்கள் மற்றும் தட்டு, டம்ளர் ஆகியவற்றையும் சுத்தம் செய்து உலர வைத்து நல்ல நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.
8. 1 முதல் 10 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவியர்களில் மதிய உணவு உண்ணும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப முட்டை தேவைப்பட்டியல் அளித்திட

www.Padasalai.Net

வேண்டும். பள்ளி திறக்கப்படும் நாளிலிருந்து முட்டையுடன் கூடிய மதிய உணவு தயார் செய்து அனைத்து பள்ளி சத்துணவு மையங்களிலும் வழங்கப்பட வேண்டும்.

9. சத்துணவு மையம் மற்றும் உணவு பரிமாறப்படும் இடத்தினை சுத்தம் செய்து தூய்மையாக உள்ளதை உறுதி செய்திட வேண்டும். மேலும், பூச்சிகள் மற்றும் ஊர்வனவற்றினா விபத்து ஏதும் ஏற்படாவண்ணம் சுத்தம் செய்யப்பட வேண்டும்.

10. ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சிறப்பு பள்ளிகளுக்கு சத்துணவு வழங்க உரிய முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு எவ்வித தடங்கலுமின்றி சூடான சத்துணவு மற்றும் வழங்கப்படுவது உறுதி செய்யவேண்டும்.

அனைத்து மையங்களிலும் பள்ளிகள் திறக்கப்படும் நாள் முதல் சுத்தமான சுகாதாரமான முறையில் சத்துணவு தயார் செய்து வழங்கிட அனைத்து முன்னேற்பாடுகளும் உறுதி செய்யப்பட்டு தயார் நிலை உள்ளது குறித்தான அறிக்கையினை 05,06,2024க்குள் அனுப்பி வைத்திடுமாறு அனைத்து மாவட்ட நேர்முக உதவியாளர்கள்(சத்துணவு) மற்றும் கூடுதல் கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் அரசாணை (நிலை) எண் .27, இன்படி அரசு நிதியுதவி பெறும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சிறப்புப்பள்ளிகள் மற்றும் ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பயிலும் குழந்தைகளுக்கு இணை உணவு மற்றும் மதிய உணவு வழங்கிட பார்வை 3ல் காணும் இவ்வலுவலக செ.மு.நடவடிக்கையின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

ஒம்/-வே.அமுதவல்லி
சமூக நல ஆணையர்

நகல்:

1 அரசு செயலாளர்,
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை,
சென்னை-600 009.

2 மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரகம்,
லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம்,
காமராஜர் சாலை, சென்னை- 05

// ஆணைப்படி //

சமூகநல ஆணையருக்காக